தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**6 வயதுப்பிரிவு**
**(01.01.2020 – 31.12.2020 வரையில் பிறந்தோர்)**

## தமிழீழம் என் தாயகம்

நான் தமிழன். என் தாயகம் தமிழீழம். அது வீரமும் ஈகமும் நிறைந்தது. காலத்தால் அழியாத வரலாறுகளைக் கொண்டது.

இது எம் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டது. அவர்களுக்குப் பின் தலைவர் மாமா தமிழீழத் தனியரசை மீட்கப் போராடினார். மாவீரர்களின் உயிர்த் தியாகத்தால் உயர்ந்து நின்றது எங்கள் தேசம்.

இன்று எமது தாயகம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டிருக்கிறது. அது அந்நியரால் ஆளப்படுகிறது. எமது உறவுகளின் வாழ்வு சிதைக்கப்படுகிறது.

தமிழர் நாம் இன்று உலகம் எங்கும் பரந்து வாழ்கின்றோம். ஆனாலும், எம் தாய்நாடு தமிழீழமே! எமது தாயகத்தை மீட்பது எம் எல்லோரதும் கடமை.

“நான் பெரிது, நீ பெரிது என்று வாழாமல், நாடு பெரிது” என்ற தமிழீழத் தேசியத் தலைவரின் வழி நடப்போம். தமிழீழத்தை மீட்போம்.

நன்றி

வணக்கம்